# இயேசு எழுபத்திரண்டு சுவிசேஷகர்களை அனுப்பி வைத்தார்

சீஷர்களை உருவாக்கப் பிற இடங்களுக்கு செல்வது பற்றிய முக்கியத்துவத்தை பிள்ளைகளுக்கு போதித்தல்.



**ஜெபம்:** “கர்த்தாவே! இயேசு தங்கள் பாவங்களை மன்னித்து வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கொண்டு வர முடியும் என்று அறியாத மக்களிடத்திற்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல உதவுவீராக!”

குழந்தைகளின் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ற செயல்பாடுகளைத் தெரிந்து கொள்க.

இயேசு தமது எழுபத்திரண்டு சீஷர்களை எவ்வாறு தேவ ராஜ்யத்தைப் பற்றி அறிவிக்க அனுப்பினார் என்பதை **லூக்.10:1-20** ல் வாசிக்கவும்.

உலகத்தின் எல்லா தேசங்களையும் சுவிசேஷம் சென்றடையத் தக்கதாக அவர் தமது ஊழியத்தை கொண்டு செல்ல அவர்களை சிறுசிறு குழுவாக அமைத்து எவ்விதம் பயிற்று வித்தார் என்பதை இப்பகுதி காட்டுகிறது.

**லூக்கா 10:1-20** ல் இருந்து கதையை ஒர் ஆசிரியரோ ஒரு பெரிய பிள்ளையோ கூறட்டும்.

பின்வரும் **கேள்வி**களைக் கேளுங்கள். (கேள்விகளுக்குப் பின் பதில் / வசன எண்)

- ஒவ்வொரு குழுவிலும் எத்தனை ஊழியர்கள் சென்றனர்? (வச.1,இரண்டிரண்டு பேர்).
- அவர்கள் முதலில் எதற்காக ஜெபித்தனர்? (2)
- அவர்கள் பலவீனமானவர்களாகவா அல்லது போராடும் உணர்வோடா சென்றனர்? (3)
- அவர்கள் எவ்வளவு உதவிப்பொருட்களை எடுத்துச் சென்றனர்? (4. எவ்வளவு குறைவாக முடியுமோ அவ்வளவு குறைவாக எடுத்துச் செல்லும்படி இயேசு கூறினார். உலகப் பொருட்கள் மேல் சாராமல் தேவன் பேரில் சாயுமாறு இயேசு விரும்பினார்).
- அவர்கள் போகும் வழியில் தங்கி நண்பர்களை சந்தித்தனரா? (4)
- சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்ட ஒரே மனிதனிடம் அவர்கள் தொடர்ந்து தங்கினார்களா? (5-8)
- மக்களை சந்தித்த போது அவர்கள் செய்த இரண்டு காரியங்கள் யாவை? (9)
- நற்செய்தியை மக்கள் புறக்கணிக்கும் போது என்ன செய்ய வேண்டும் என்று இயேசு கூறினார்? (10-11)
- சீஷர்கள் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்த போது சாத்தானின் வல்லமைக்கு என்ன நிகழ்ந்தது? (18)
- பிசாசுவைக் கட்டுவதை விடவும் இயேசு கூறிய எது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது? (20)

எழுபது சுவிசேஷகர்களின் கதையை **நாடகமாக்குக.** சபைத் தலைவரோடு பேசி பிள்ளைகள் நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்க. பெரிய பிள்ளைகள் சிறுவர்கள் ஆயத்தப்பட உதவட்டும்.

ï **பெரிய பிள்ளைகள்** அல்லது பெரியவர்கள் நடிக்க வேண்டிய பாத்திரங்கள்: இயேசு, எதிரி, கதை கூறுபவர். எதிரியின் வேடத்தைப் பெரியவர் ஒருவர் ஏற்றால் நல்லது.

- சுவிசேஷகர்கள், மக்கள் ஆகியயோரின் வேடத்தை சிறிய பிள்ளைகள் ஏற்கட்டும்.

**கதை கூறுபவர்:** லூக்கா 10:1-16ல் இருந்து முதல் பகுதியைக் கூறவும். பின் கூற வேண்டியது, “ஊழியர்களை அனுப்புமாறு தேவனை நோக்கி வேண்டிய பின் இயேசு தமது சீஷர்களிடம் கூறுவதாவது.”

**இயேசு** : “இரண்டு பேர் அடங்கிய குழுக்களாக செல்லுங்கள். ஒநாய்களுக்குள் ஆடுகளைப் போல இருப்பதால் எச்சரிக்கையாய் இருங்கள். நற்செய்தியைக் கூறுங்கள். வியாதியஸ்தர்களைக் குணமாக்குங்கள். நான் சீக்கிரமாய் வருவதை ஒவ்வொரு பட்டிணத்திலும் கூறுங்கள். பரலோகராஜ்யம் சமீபமாய் இருக்கிறது.”

**சீஷர்கள்** : “நாங்கள் எங்களோடு எதை எடுத்துச் செல்வது?”

**இயேசு** : “முடிந்த அளவு குறைவாகவே எடுத்துச் செல்லுங்கள். வேகம். வழியில் வேறெங்கும் செல்ல வேண்டாம். செய்தி அவசரமானது”.

**சீஷர்கள்** : “நாங்கள் எங்கே தங்குவது?”

**இயேசு** : “சமாதானத்தோடு ஏற்றுக் கொள்ளுகிற ஒரு மனிதனைக் கண்டு பிடியுங்கள். அந்தப் பட்டிணத்தில் இருக்கும் வரை அங்கேயே தங்குங்கள். அவன் தருவதை உண்ணுங்கள்.”

**சீஷர்கள்** : “மக்கள் எங்களை நிராகரித்தால் என்ன செய்வது?”

**இயேசு** : “சொல்லுவதை நீங்கள் தெளிவாகச் சொன்ன பின்னும் அவர்கள் உங்களை நிராகரித்தால் வேறு இடத்திற்கு செல்லவும்.”

**சீஷர்கள்** : இரண்டு இரண்டு பேராக இப்படி கூறிய படி செல்லவும்.

“நற்செய்தியைக் கேளுங்கள். அது எங்கள் வாழ்க்கையை மாற்றிவிட்டது.”

“இயேசுவின் நாமத்தினால் குணமாகுங்கள்!”

“தேவ மன்னிப்பை நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் பெற்றுக் கொள்ளுங்கள்.”

**எதிரி**: “என் பெயர் எதிரி! நான் எல்லா மனிதர்களையும் வெறுக்கிறேன்!”

சீஷர்களைப் பின்தொடர்ந்து சென்று உங்கள் சொந்த வார்த்தையால் கூறுங்கள்.

“இரண்டு பேர் அடங்கிய குழுவாகப் போக வேண்டாம். பெரிய குழுக்களாகப் போங்க. அதுதான் பாதுகாப்பானது.”

“நிறைய பொருட்களை எடுத்துச் செல்லுங்கள்! அது மக்கள் கவனத்தைக் கவரும்!’

“நிறைய உணவுப் பொருளை எடுத்துச் செல்லுங்கள்”

“போகிற வழியில் நண்பர்களை சந்தியுங்கள்”

“ஒரே வீட்டில் தங்க வேண்டாம். உணவு எங்கு நன்றாக இருக்கிறது என்று பாருங்கள்”

“உங்கள் செய்தியை அவர்கள் புறக்கணித்தாலும் விடவேண்டாம். அவர்களைத் தொடர்ந்து வற்புறுத்துங்கள்.”

“ஒரு தடவை எல்லோரும் சுவிசேஷத்தை கேட்குமுன்னர் இரண்டாவது முறையாக யார் அதைக் கேட்டாலும் சரியாக இருக்காது. எனவே நகரில் உள்ள எல்லா வீட்டுக் கதவிலும் ஒரு சுவிசேஷ துண்டுப் பிரதியை போடவும்.”

**சீஷர்கள்** : இந்த விஷயங்களை எதிரி கூறினாலும், இதற்கு நேர் மாறான இயேசுவின் அறிவுரைகளையே கேளுங்கள்.

**கதை கூறுபவர்**: லூக்.10:17-23 லிருந்து கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும். பின்னர் கூறுவது, “திரும்பி வந்த பின் சீஷர்கள் இயேசுவிடம் கூறுவதைக் கேளுங்கள்”

**சீஷர்கள்** : “கர்த்தராகிய இயேசுவே, நாங்கள் சந்தோஷமாக இருக்கிறோம். உமது நாமம் வல்லமையானது! நாங்கள் உமது வல்லமையை உபயோகித்து மக்களை குணமாக்கினோம். எங்களுக்கு உமது வல்லமையை கொடுத்ததற்காக நன்றி. நாங்கள் பிசாசுகளைக் கூட துரத்தினோம்.”

**இயேசு** : “வல்லமையோடு இருப்பதற்காக சந்தோஷப் பட வேண்டாம். ஆனால் உங்கள் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டு இருப்பதற்காக சந்தோஷப்படுங்கள்”

ஜெபம் : "பிதாவே, குழந்தைகளைப் போல பலவீனமான மக்களைக் கொண்டு நீர் செயலாற்றுவதற்காக உம்மைத் துதிக்கிறேன். எனது வல்லமையையும் சத்தியத்தையும் நீர் கூறிய படி அவர்களுக்கு கொடுத்துள்ளேன்."

கதை கூறுபவர் உதவி செய்த யாவருக்கும் நன்றி கூறவும்.

**கேள்விகள்:** இந்த நாடகத்தை சிறுவர்கள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் பக்கம் 1 ல் பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் கேட்கவும்.

சாலையில் இருவர் நடந்து போகும் ஒரு எளிய படத்தை சிறுவர்கள் பார்த்து வரையட்டும். அதை ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்குக் காட்டி, இது நாம் எவ்வாறு இயேசுவைப் பற்றிய நற்செய்தியைப் பிற இடங்களுக்கு எடுத்து செல்லுகிறோம் என்பதைக் காட்டுகிறது என்று விளக்கவும்.

இயேசுவக்குக் கீழ்ப்படிவது பற்றி மக்களுக்கு எவ்வாறு போதிப்பது என்பது பற்றி விவாதிக்கவும். பிள்ளைகள் உதாரணங்களைத் தரட்டும்.

**கவிதை:** ஏசாயா 52:7-8 ஐ இரண்டு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும் அல்லது, ஏசாயா 52:7-10 ஐ நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

லூக்கா 10:2 அல்லது லூக்கா 10 ஆம் அதிகாரத்தில் உள்ள ஏதாவது இயேசுவின் வசனத்தை அடிப்படையாக வைத்து **பெரிய பிள்ளைகள்** கவிதை அல்லது பாடல் எழுதட்டும்.

**மனப்பாடம்:** மாற்கு 1:15

**ஜெபம்:** "பிதாவே, இயேசுவைப் பற்றிய நற்செய்தியை பிறருக்கு எடுத்துச் செல்ல உதவும். இந்த உலகத்தின் விஷயங்கள் எங்களை சிதறடிக்காதபடி காத்துக் கொள்ளும். இயேசுவின் சீஷர்களின் முன் உதாரணங்களை பின்பற்ற எங்களுக்கு உதவும். அவர்களைப் போல உமது நாமத்துக்கு நாங்களும் மகிமை கொண்டு வருவோமாக."

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net.